# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil ₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX | FEBRUARY 2024 | No. 02


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 112:1-10

1. அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.
2. அவன் சந்ததி பூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும்.
3. ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும்; அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும்.
4. செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்; அவன் இரக்கமும் மனஉருக்கமும் நீதியுமுள்ளவன்.
5. இரங்கிக் கடன் கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான்.
6. அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான்; நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்.
7. துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்; அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும்.
8. அவன் இருதயம் உறுதியாயிருக்கும்; அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான்.
9. வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்; அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்.
10. துன்மார்க்கன் அதைக் கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக் கரைந்துபோவான்; துன்மார்க்கருடைய ஆசை அழியும்.

## தேவனுடைய கரம் உம்மேல் நன்மையாக இருக்கிறது!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*

**"என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும் ..." நெகேமியா 2:18.**



'கர்த்தருடைய கரம்' என்ற கருத்து நம் ஆவலைத் தூண்டுகிறதால் இருக்கிறது. ஆங்கில வேதாகமப் பதிப்பு ஒன்றில் (KJV) பழைய ஏற்பாட்டில் 36 இடங்களில் 39 முறையும், புதிய ஏற்பாட்டில் 3 முறையும், 'கர்த்தருடைய கரம்' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 'தேவனுடைய கரம்', என்ற சொற்றொடர், புதிய ஏற்பாட்டில் 9 முறையும், பழைய ஏற்பாட்டில் 7 முறையும் மொத்தம் 16 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் மட்டுமல்ல, இன்றைய காலக்கட்டத்திலும், 'தேவனுடைய கரம்' என்ற கருத்து மிகவும் முக்கியம் வாய்ந்ததாக உள்ளது. நம்முடைய வாழ்க்கையில் தேவகரம் ஏன் மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது?

❋ அப்போஸ்தலர் 7:50 இல், **இவைகள் எல்லாவற்றையும் என்னுடைய கரம் உண்டாக்கவில்லையா என்று கர்த்தர் உரைக்கிறார் என்று தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே** என்று எழுதப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...






**நீ இக்கரையிலும், அக்கரையிலும் வெகு திரளான விருட்சங்களைக் காண்பாய். (எசேக்கியேல் 47:7)**

கிறிஸ்துவுக்குள் எனது நண்பர்களே,

நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் எங்கள் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** பலவிதமான ஊழியங்களை இடைவிடாமல் ஜெபித்து, தாங்குகிற உங்களுக்கு எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் அர்ப்பணிப்புக்குத் தகுந்த பிரதிபலன்களை தேவன் அருள்வாராக!

### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.



**நமது செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின் ஆசிரியைகள்**

கடந்த காலங்களில் (கிறிஸ்மஸ், புதுவருடம், சிறுவர் வேதாகமப் பள்ளி வருடாந்தர நிகழ்ச்சிகள்) சந்தோஷபுரம், பாலாஜி நகர், வேளச்சேரி மற்றும் சில பகுதிகளில் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தினோம். உண்மையாகவே அதின் விளைவுகள் எங்களை உற்சாகமூட்டின. ஏனென்றால், தேவ பிரசன்னம் கூடியிருந்த மக்களின் இருதயங்களைத் தொட்டது. இந்த புதிய வருடத்திலும் நாங்கள் திட்டமிட்டுள்ள நிகழ்ச்சிகளில் உங்கள் ஜெபங்கள் எங்களைத் தொடர்ந்து தாங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858, 95661 31858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com
YOUTUBE CHANNEL
Echo of His Call



**கிராமங்களில் தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் ஊழியங்கள்**

**Our Ministries:** ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ☼ BIBLECOR - Postal Courses (3 languages) ☼ YouTube Ministry ☼ Online Courses ☼ Theological Correspondence Courses (2 languages) ☼ Church Planting ☼ Nehemiah Bible Colleges ☼ Gospel Printing Press ☼ Great Commission Partners ☼ St. Paul's Matriculation School ☼ Crusades ☼ Community Development



ATA அங்கீகாரத்திற்கு பணிபுரியும் குழுவினருடன் தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்கு 'ஆசிய இறையியல் சங்கம்' Asia Theological Association (ATA)** என்ற ஸ்தாபனத்தின் அங்கீகாரம் பெற ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்று மகிழ்வுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். இம்முயற்சிகள் முடிவு பெற்று அங்கீகாரம் கிடைக்க உங்கள் ஜெபம் தேவைப்படுகிறது. நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** நூல் நிலையத்திற்கு இந்தி மொழியில் இறையியல் புத்தகங்கள் ஏராளம் தேவைப்படுகின்றன. இந்தி மொழிக் கல்லூரி மாணவர்கள் படிப்பதற்கான புத்தகங்கள் கிடைக்கும் வழி உங்களுக்குத் தெரியுமானால், எங்களுக்கு அதை அறிவியுங்கள்.

கடந்த வருடத்தைத் திரும்பிப் பார்த்தால், நமது உடன் ஊழியர் சிலர் சரீர ஆரோக்கியமில்லாமல் கஷ்டப்பட்டனர். சிலரை தேவன் தமது கிருபையால் சுகப்படுத்தினார். இன்னும் சிலருக்கு உங்களது தொடர் ஜெபம் தேவையாயிருக்கிறது.

நாங்கள் ஊழியத்தில் முன்னேறிச் செல்ல, எங்களது பலவிதமான முயற்சிகள் வெற்றியடைய உங்களது ஜெபம் தேவைப்படுகிறது நாங்களும் உங்களுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கிறோம் என்பதில் நீங்களும் உறுதியாக இருக்கலாம்.

நன்றியுடனும், நல்வாழ்த்துக்களுடனும்

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

(+91) 98410 71858 / 98412 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## நமது அழைப்பின் எதிரொலி பத்திரிகையின் வாசகர்களின் கவனத்திற்கு!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* Echo of His Call YouTube *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

- யாபேஸ் தேவ கரத்தின் முக்கியத்துவத்தை அறிந்திருந்தான். ஆகவேதான் அவன், ... **உமது கரம் என்னோடிருந்து,** ... 1 நாளாகமம் 4:10 – இல் என்று கூறுகிறான் தேவனது கரம் நமது ஒவ்வொரு கிரியையிலும், நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் இருந்தால், அது ஒரு பெரிய தாக்கத்தை உண்டு பண்ணும். இவ்வாறு நம்மில் எத்தனைபேர் சொல்ல முடியும்?
- **என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது** ... சங்கீதம் 31:15
- சங்கீதம் 138:8 – ... **உமது கரத்தின் கிரியைகளை (எங்களை) நெகிழவிடாதிருப்பீராக.**
- தானியேல் 5:23 – ... **தம்முடைய கையில் உமது சுவாசத்தை வைத்திருக்கிறவரும்** ...
- சங்கீதம் 19:1 – ... **ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது.**
- நீங்களும் நானும் கைகளைக் கோர்த்து, "தேவ கரத்தில் என் கையை வைக்கும்பொழுது ஒரு விசேஷித்த மாற்றத்தை நாம் காணலாம்."

'தேவனுடைய கரம்' செய்யக்கூடிய சில காரியங்களை நாம் சிந்திக்கலாம்.

## 1. சிருஷ்டிப்பின் கரம்!

தேவனுடைய கரம் சிருஷ்டிப்பின் கரமாயிருக்கிறது. இல்லாதவைகளை அவரால் உண்டாக்க முடியும். ... **இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு** ... என்று ரோமர் 4:17 இல் வாசிக்கிறோம். அவருடைய கரம் புதியவைகளை சிருஷ்டிக்கும். அவரே சிருஷ்டிகர். அது மட்டுமல்லாமல், செத்துப் போனவைகளுக்கு உயிர் கொடுக்க அவரது கரத்தினால் கூடும். செத்துப் போன, உயிரற்ற, எதிர்காலம் இல்லாததுபோல இருக்கும் காரியங்களை அவருடைய கரம், மறுபடியுமாய்ப் பிழைக்க வைத்து, எழும்ப வைத்து, செழிப்பானதாய் மாற்ற முடியும். அதுவே தேவ கரத்தின் வல்லமையாகும். நாயினூர் விதவையின் மகனை அவரது கரம் தொட்டபோது, அவன் உயிரோடு எழும்பினான். அந்த விதவையின் மகனுக்கு உயிர் தந்தது மட்டுமின்றி, அவளுடைய மரித்துபோன வாழ்க்கை சூழ்நிலையை மாற்றி, ஜீவன் கொடுத்து, அவள் இழந்த நம்பிக்கை, மகிழ்ச்சி, விசுவாசம் அனைத்தையும் மீட்டுக் கொடுத்தார்.

அவரது தொடுதல் அவளது வாழ்க்கைக்கு ஒரு புதிய நோக்கத்தை அளித்து, ஒரு புது அர்த்தத்தையும் அவளுக்கு அளித்தது. அவர் **கிட்டவந்து, பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள்; அப்பொழுது அவர் (இயேசு கிறிஸ்து): வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார்.** லூக்கா 7:14,15.

இவ்வருடத்தின் ஆரம்ப நாட்களில் நாம் இருப்பதால், இவ்வருடத்தில் நமக்கு முன்பாக வரப்போகும் சவால்களைச் சரியாக அறியாமல் இருக்கிறோம். ஒரு முட்டுச் சந்தில் வந்துவிட்டது போலவும், அதிலிருந்து எப்படி வெளியே வருவது என்றோ, அல்லது அடுத்து என்ன செய்வது என்றோ அறியாமல் திகைக்கும் சூழ்நிலையில் நீங்கள் இருக்கலாம். ஒரு மாதம்தான் முடிந்திருக்கிறது. இவ்வருடத்தின் மீதியான மாதங்கள் எப்படி இருக்குமோ என்ற கவலையில் இன்றைய சூழ்நிலைகள் கொண்டு போயிருக்கலாம். இதை நான் எப்படி கையாளப் போகிறேன்?

அன்பான நண்பர்களே, உங்கள் வாழ்வின் மரித்த பகுதிகளில் தேவன் தமது ஜீவனை ஊத அனுமதிப்பது அவசியமாயிருக்கிறது. அந்த பகுதிகள் மலட்டுத் தன்மையுடையதாகவும், பலனளிக்காத தன்மையுடையவைகள் என்றும் அறிக்கை செய்து, தேவன் அவற்றை உயிரடையச் செய்ய அவரை அனுமதியுங்கள். இவ்வாறு நடக்க தன்னைத்தானே ஆராயவும், உணர்வடையவும் அவசியமாயிருக்கிறது.

## 2. திருப்தியளிக்கும் கரம்!

~ (சங்கீதம் 145:16)

**நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்.** சங்கீதம் 145:16.

'திருப்தி'க்கு மூல ஆதாரம் தேவனது கரம்தான். தேவன் தமது ஜனத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியடைகிறார். **அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு, அவர்களை இரட்சிக்கிறார்.** சங்கீதம் 145:19. மேலும் சங்கீதம் 37:4–இல், ... **அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அநேக நேரங்களில் இந்த வசனத்தை வாசிக்கும்பொழுது, நம் இருதயத்தில் எழும்பும் ஒவ்வொரு விருப்பத்தையும் தேவன் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்க்கிறோம். நாம் விரும்பியது கிடைக்காதபோது, நாம் சோர்ந்து போய், தேவன் தமது வாக்கை நிறைவேற்றவில்லை என்று அவரைக் குற்றம் சொல்லுகிறோம்.

அன்பு நண்பர்களே, இந்த வசனத்தை நாம் வாசிக்கும்பொழுது, தேவன் தமக்கு பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்கிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால், அவருக்கு பயந்தவர்களின் விருப்பங்களும் ஆசைகளும் அவரது சித்தத்திற்கு ஒத்ததாக இருக்கும். எகிப்திலிருந்து இஸ்ரவேலரை தேவன் நடத்தியபோது, அவர்கள் இறைச்சி சாப்பிட வேண்டும் என்று விரும்பினார்கள். என்னைப்போலத்தான் அவர்களும் இருந்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன். மாமிச உணவுதான் எனக்கு மிகவும் பிடித்ததாகும். அது இல்லாமல் காய்கறி உணவு சாப்பிடுவது சற்று கடினம்தான். பரலோக உணவில் திருப்தியற்றிருந்த இஸ்ரவேலருக்கு அவர்கள் விருப்பத்தின்படியே தேவன் அருளினார். அதுபோலவே, எல்லா விதத்திலும் தேவன் நம்மைத் திருப்திப்படுத்த விரும்புகிறார். ஆனால் அவருக்கு பயந்து, அவரில் மகிழ்ச்சியாயிருந்து, கர்த்தரிடத்தில் தங்களது வழியை ஒப்புவித்த மக்களுக்குத் தான் இந்த திருப்தி முன்பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தேவனுக்கும், நமக்கும் சிந்தையிலே ஒருமைப்பாடு இருக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்படுகிற நபர், தேவனது மனதையும் இருதயத்தையும் எப்போதும் புரிந்து கொண்டு இருப்பார்.

உங்களுடைய நிலைமையில் திருப்தியோடு இருந்தால், திருப்தியளிக்கும் தேவனது கரத்தின் வல்லமையை உங்கள் வாழ்க்கையில் காண்பீர்கள்.

## 3. தாங்கும் கரம்!

பயப்படாதே!

**நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்.** சங்கீதம் 37:23–24.

நீதிமான் தடுமாறும்போது தேவனது கரம் அவனைத்தாங்குகிறது.

ஏசாயா 41:10–13 – **நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன் ... உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலதுகையைப் பிடித்து: பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன் என்று சொல்லுகிறேன்.**

என் வாலிப நாட்களில், தென் இந்தியாவிலுள்ள நாகர்கோயில் என்ற இடத்திற்கு என் அப்பாவோடு ஊழியத்திற்காகச் சென்ற காலத்தை நினைவுகூருகிறேன். திரும்பி வீட்டிற்கு வரும்போது, 600 கி.மீ. பயணிக்க வேண்டியிருந்தது. அப்பொழுது ஒரு கடல் அல்லது ஆறு (சரியாக நினைவில்லை) ஒன்றினைக் கடக்க வேண்டியிருந்தது. இடியுடன் புயலடித்து, அதிக மழை பெய்து கொண்டிருந்தது. எங்கள் பேருந்து அந்த பாலத்தின் மேல் கடந்து சென்றபோது, பாலம் ஆடுவதையும், வெள்ளம் உயர்ந்து வருவதையும் உணர்ந்தேன். நான் மிகவும் பயந்துவிட்டேன். பின்பு, ஒரு மிதமான சூடான கரம் என் கரத்தைப் பிடித்ததை உணர்ந்தேன். அது என் அப்பாவின் கரம். அது எனக்கு போதும். அவர் என் கையைப் பிடித்து, "பயப்படாதே நான் உன்னோடே இருக்கிறேன். உன்னை ஒன்றும் தொட முடியாது" என்று சொல்வதுபோல உணர்ந்தேன். அந்த வார்த்தைகளை என் அப்பா என்னிடம் சொல்லத் தேவையில்லை. ஆனால் அவரது கரத்தின் பிடி, எனக்குத் தேவைக்கும் அதிகமான பாதுகாப்பு உணர்வைத் தந்தது. அதற்குப் பிறகு அந்த பயம் எனக்கு இல்லாமல் போயிற்று.

அன்பு நண்பர்களே, "கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்" என்ற வசனத்தை நான் வாசிக்கும்போது, உங்களையும் என்னையும் தமது வல்லமையும் பராக்கிரமுமுள்ள கரங்களினால் கர்த்தர் தாங்குகிறார் என்று நினைவு கூருகிறேன். நாம் கவலைப்படத் தேவையில்லை. நமது கரத்தை யார் பிடித்திருப்பது என்பதை அறிந்து சமாதானமாய் இருப்போமா? எல்லா

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

போதனா மொழி : தமிழ்

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry
Diploma in Theology

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS
ECHO OF HIS CALL MINISTRIES
SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும்
**துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் . 2024 பிப்ரவரி 19 முதல் மார்ச் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

பிப்ரவரி 19 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

பிப்ரவரி 20 ⇨ **அழைப்பின் எதிரொலி** யூடியூப் சேனல் மூலமாக, சந்திக்கப்படாத பன்மொழி மக்களை சந்திக்க வைத்த கிருபைக்காக ...

பிப்ரவரி 21 ⇨ நமது **அழைப்பின் எதிரொலியின்** இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

பிப்ரவரி 22 ⇨ நமது முழுநேர **நெகேமியா வேதாகமக் கல்லூரியில்** ஜனவரி 26–ம் தேதி அன்று மாணவர்கூடுகை சிறப்பாக நடைபெற்ற கிருபைக்காக ...

பிப்ரவரி 23 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப் பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப் பட்டு வருகிறதற்காக ...

பிப்ரவரி 24 ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகமக்கல்வி** முறைகளின் வளர்ச்சி களுக்காக ...

பிப்ரவரி 25 ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபையின் ஞாயிறு ஆராதனைகளில் வழங்கப்படும் தேவச்செய்திகளின் வல்லமைக்காக ...

பிப்ரவரி 26 ⇨ நமது பங்காளர்களின் உறுதுணை மற்றும் பொருளாதார ஆதரவிற்காக ...

பிப்ரவரி 27 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாத்து வருகிறதற்காக ...

பிப்ரவரி 28 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் **அஞ்சலவழிக் கல்விமுறைகளைக்** கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

பிப்ரவரி 29 ⇨ நமது கடந்த மாதத்திய தேவைகளை சந்தித்ததற்காக...

மார்ச் 01 ⇨ **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** பணியாளர்களை மற்றும் அவர்கள் குடும்பத்தி னரைக் காத்து வருகிற கிருபைக்காக...

மார்ச் 02 ⇨ இளம்பிராயத்தினரை உற்சாகத்தினால் நிரப்பி அனைத்து சபை நடவடிக்கைகளிலும் பங்கேற்க செய்த கிருபைக்காக ...

மார்ச் 03 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களை கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

மார்ச் 04 ⇨ உலக நாடுகள் அனைத்திலும் ஒற்றுமையும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டி ...

மார்ச் 05 ⇨ நமது பங்காளர்கள் மற்றும் மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காக...

மார்ச் 06 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட வேண்டி ...

மார்ச் 07 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** இந்தி பேராசிரியர் Rev. ஜானி அவர்கள் விரைவில் குணமடைய வேண்டி...

மார்ச் 08 ⇨ நமது அனைத்து பொருளாதாரத் தேவைகளும் சந்திக்கப்பட வேண்டி...

மார்ச் 09 ⇨ நமது ஆங்கில இணை ஆசிரியர் சகோதரி சாஜினி செரியன் அவர்கள் விரைவில் குணமடைய வேண்டி...

மார்ச் 10 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் கோவிட்–ன் புதுவகையான தொற்று நோயின் தாக்குதலி லிருந்து தேவ பாதுகாப்புடன் திகழ ...

மார்ச் 11 ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி ...

மார்ச் 12 ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு Rev. K.R. ராஜசேகரன் அவர்கள் மூலம் வெற்றிகரமாக நிறைவடைந்திட...

மார்ச் 13 ⇨ முதியோர் இல்லங்களில் உள்ள வயதானவர்களின் நலனுக்காக ...

மார்ச் 14 ⇨ உலக நாடுகளிலுள்ள பிள்ளைகள் மற்றும் இளவயதினர் இணையதள விளையாட்டு களின் அடிமைத்தனத்திலிருந்து பாதுகாக்கப் பட வேண்டி ...

மார்ச் 15 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காக வும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களின் நலனுக்காகவும் ..

மார்ச் 16 ⇨ உலக நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்காக கர்த்தரின் ஆசீர்வாதங்களை வேண்டி...

மார்ச் 17 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினர் அனைவரையும் சகலவிதமான தீய சக்திகளின் வல்லமைக்கு விலக்கிக் காத்திட வேண்டி...

மார்ச் 18 ⇨ உலகமெங்கும் களப் பணியாளர்களுக்கு தேவ பாதுகாப்பு கிடைத்திட...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

புத்திக்கும் மேலான தேவ சமாதானம் ண்டாகும். கைகளும், கால்களும் கட்டப்பட்டு அடித்து நொறுக்கப்பட்டு, காயங்களுடன் இருந்த பவுலும், சீலாவும், அடுத்து என்ன நடக்குமோ என்று அறியாத சூழ்நிலையிலும், அந்த தேவ சமாதானம்தான் அவர்களைப் பாட வைத்தது. அதே சமாதானத்தைத்தான் அக்கினியிலே நடந்த அந்த எபிரேய புருஷர்கள் உணர்ந்தார்கள்.

நமது கரங்கள் வல்லமையுள்ள தேவனுடைய கரங்களைப் பற்றிக் கொண்டிருக்குமானால், நாம் எங்கே வேண்டுமானாலும் நடக்கலாம். **நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்; உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்** என்று சங்கீதம் 23: இல் வாசிக்கிறோம். தேவன் உங்கள் கரத்தைப் பிடித்திருக்கிறார் என்று அறிந்து, இவ்வருடத்தின் மீதியான மாதங்களைக் கடந்து செல்லுங்கள். எந்த சூழ்நிலையையும் சந்திக்க தேவன் உங்களுக்கு பெலன் கொடுப்பார். உங்களுக்காக நான் ஜெபிக்கிறேன்.

இந்த பயணத்தில் நீங்கள் தனிமையாக இல்லை. நமது கடந்த நாட்களையும், இன்றைய நிலைமைகளையும், நாளை நடக்கப்போவதையும் அறிந்த ஒருவர் உங்களுடன் இருக்கிறார். நமது எதிர்காலத்திலும் அவர் ஏற்கனவே இருந்தபடியினால், நமக்கு எதிர்காலத்தில் என்ன நடக்குமோ? என்று கவலைப்பட வேண்டாம். அவர் என்னை நடத்துவாரானால், எல்லா பிரச்சனைகளிலுமிருந்து என்னை வெளியே கொண்டுவருவார்.

## 4. வல்லமையுள்ள கரம்!

அவருடைய கரம் வல்லமையுள்ளது – அந்த கரம் உங்கள் பக்கம் இருந்து உங்களுக்கு ஜெயத்தைக் கொடுக்கும் அல்லது உங்களை எதிர்த்து யுத்தம் செய்யும்.

ஏசாயா 19:16 இவ்வாறு சொல்கிறது: **அக்காலத்திலே எகிப்தியர் பெண்டுகளைப் போலிருந்து, சேனைகளின் கர்த்தர் தங்கள்மேல் அசைக்கும் கையசைவினாலே அஞ்சி நடுங்குவார்கள்.**

கர்த்தருடைய கரத்தை எதிர்த்து ஒருவனும் நிற்க முடியாது! அது உங்களை எதிர்த்து வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்! தேவனுடைய கரம் நம் பக்கம் இருக்கும் வரைக்கும் நாம் பத்திரமாக இருப்போம். ஆனால் அது நமக்கு எதிராக இருக்குமானால், நாம் ஒன்றுமில்லாமல் போய் விடுவோம்.

## தேவனுடைய கரம் எப்போது நமக்கெதிராக வரும்?

அப்போஸ்தலர் 13:8–11 இல் எலிமா என்ற ஒரு மாய வித்தைக்காரன் பவுல் மற்றும் பர்னபாவின் ஊழியத்தை எதிர்த்தும், அந்த பட்டணத்தின் அதிபதியின் விசுவாசத்தைக் கெடுக்கவும் முயற்சி செய்ததை வாசிக்கலாம். பவுல் அவனைப் பார்த்து, **இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய் என்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது...** அப்போஸ்தலர் 13:11.

கர்த்தருடைய சுவிசேஷத்தின் எதிரிகளை அவர் தமது வல்லமையுள்ள கரத்தினால் நியாயம் தீர்ப்பார். கர்த்தருடைய வேலைக்கு எதிர்த்து நின்று, கர்த்தருடைய வேலையைத் தடுக்கும்படியாக பேசுவோமானால், தேவனுடைய கரம் நமக்கு எதிராக வரும். கர்த்தருடைய ஜனத்திற்கு எதிராகப் பேசாதிருங்கள். 'வாட்ஸ் அப்'–இல் தேவையில்லாத செய்திகளைப் பிறருக்கு அனுப்பாதேயுங்கள். புறம் பேசாதிருங்கள். கர்த்தருடைய வேலைக்கு எதிராகவோ அல்லது அவருடைய ஊழியக்காரருக்கு எதிராகவோ பேசாதீர்கள்.

நம்மில் சிலர் இருளிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேவனுடைய வேலைக்கு தடைக்கற்களாய் நாம் இருந்ததினால், தேவன் கண்களை குருடாக்கியுள்ளார். இன்று நம் காரியங்களைத் திரும்பிப் பார்ப்போம். நமது கிரியைகளினாலோ, வார்த்தைகளினாலே, கர்த்தருடைய வேலையைத் தடுக்கவோ, இடையூறு செய்தோ இருந்தோமா? எதையாவது செய்தோ, செய்யாமலோ ஊழியங்களுக்கு இடையூறாக இருந்தோமா? அவ்வாறு இருப்பின், நாம் கவனமாக இருக்க வேண்டும். கர்த்தருடைய கரம் நமக்கு எதிராக இருக்கிறது என்று உணர வேண்டும்.

தேவனுடைய கரம் நமக்குச் சாதகமாக இருந்தால், அது நமக்கு வெற்றியைத் (இரட்சிப்பை) தரும். **கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார். அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது.** சங்கீதம் 98:1.

அன்பான தேவ ஊழியர்களே, உங்கள் பாதை ஒருவேளை தனிமையானதாக, நீண்டதாக, கடினமானதாக இருக்கலாம். உங்களில்

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


முழுநேர இந்தி வகுப்புகள்
நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry
Diploma in Theology

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல்: sam@echoofhiscall.org /இணையதளம்: www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஜெப உதவி | – | 24 மணி நேரம் |
| 2. அழைப்பின் எதிரொலி | – | பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ். | | |
| 3. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – | (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 4. வேதாகமக் கடித முறைக் கல்வி | – | தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | | |
| 7. பயிற்சி வகுப்புகள் | | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – | தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – | சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – | கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – | ஞாயிறு காலை 10.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – | ஞாயிறு காலை 8.30 மணி |
| 14. இந்தி ஆராதனை | – | ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – | ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – | ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. பெண்கள் ஆராதனை | – | புதன் மாலை 5.30 மணி |
| 18. ஆண்கள் ஆராதனை | – | வெள்ளி இரவு 7.00 மணி |
| 19. சீஷத்துவக் கூட்டம் | – | சனி மாலை 6.00 மணி |
| 20. வீட்டுக் கூட்டங்கள் | – | செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 21. விசேஷ திருவிருந்து | – | பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 22. ஊழியர்கள் கூடுகை | – | முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி |
| 23. பெற்றோர் ஜெபம் | – | முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 24. இரவு ஜெபம் | – | 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 25. உபவாச ஜெபம் | – | இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 26. திருவிருந்து | – | 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 27. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – | தினமும் இரவு 10.00 மணி |
| 28. பணியாளர் ஜெபம் | – | தினமும் காலை 9.00 மணி |
| 29. அலுவலகம் | – | தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

# அழைப்பின்எதிரொலி
## பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## நீங்கள் நூறத்தனையாய் அடைவீர்கள்! நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவீர்கள்!!

செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்... - பிரசங்கி 9:10
காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான், மேகங்களை நோக்குகிறவன் அறுக்க மாட்டான் - பிரசங்கி 11:4.

'ஜீவ ஒளி' என்ற தபால் வழி இறையியல் கல்வியின் மூலம் நான் எனது இளவயதில் ஆசீர்வதிக்கப்பட்டதால், வேதாகம தபால் வழிக் கல்வி மற்றும் வேதாகமக் கல்லூரி போன்றவைகளில் வேத புத்தகத்தின் ஆழமான சத்தியங்களைப் போதிக்க வேண்டும் என்பது எனது நீண்டகால ஆசையாக இருந்து வந்தது. இந்த பலமான ஆசை என் இருதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அது வேர் கொண்டு பல வருடங்களாக என் இருதயத்தினுள் வளர்ந்து ஜொலித்துக் கொண்டிருந்தது. ஆனால் எனக்கு அதற்கான எந்த வருமானமோ அல்லது என்னோடு இணைந்து செயல்பட்டு என்னை வழி நடத்தும் நபர்களோ கிடைக்கவில்லை. அக்காலங்களில் நானும் எனது குடும்பமும் வறுமையிலும், அதிக தேவைகளிலும் வாழ்ந்து வந்தோம். நாங்கள் வாழ்ந்து வந்த வாடகை வீடும் எந்த வசதியும் இல்லாதிருந்தது.

1980–ஆம் ஆண்டில் ஒருமுறை 'இந்திய வேதாகம இலக்கியம்' (India Bible Literature) என்ற ஸ்தாபனம் வெளியிட்ட ஒரு சுவிசேஷ புத்தகங்கள் அடங்கிய பார்சல் எனக்கு வந்தது. அதினுள் சில சுவிசேஷக் கைப்பிரதிகளும், தபால்வழிக் கல்வியின் ஒரு புத்தகமும் இருந்தது. நான் அதைப் படித்தபோது, அந்த தபால் வழிக் கல்வியின் புத்தகத்தை பல மொழிகளில் மொழி பெயர்த்து இந்திய மக்களனைவரும் பயனடைய உபயோகிக்கலாமே என்ற எண்ணம் எனக்குள் வந்தது. உடனேயே எனது பழைய சைக்கிளை எடுத்துக் கொண்டு, சென்னையில் 'ஆயிரம் விளக்கு' என்ற பகுதியில் செயல்பட்டு வந்த அந்த 'இந்திய வேதாகம இலக்கியம்' என்ற ஸ்தாபனத்திற்கு விரைந்து சென்றேன்.

அங்கு திரு. வேலு என்ற மறுபெயர் கொண்ட திரு. வேலாயுதம் என்ற இளம் வாலிபரைச் சந்தித்தேன். இப்பொழுது அவர் அதின் நிர்வாக இயக்குநராக உள்ளார். அவர் அப்புத்தகங் களையெல்லாம் சிறப்பாகவும், பொறுப்புடனும் ஒழுங்குபடுத்தி தபால் நிலையத்திற்கு அனுப்புவதைக் கவனித்தேன். அப்பொழுது நான் அவரோடு இணைந்து, அவரைப் போலவே அப்பணியினைச் செய்ய முடிவு எடுத்தேன்.

அவரை வியந்தபடி அவரை அணுகி, எனக்கு சில புத்தகங்களைக் கொடுக்க முடியுமா என்று கேட்டேன். அப்பொழுது அவர் ஒரு புத்தகத்தின் விலை 50 பைசா என்றார். அவரிடம் நான், "நான் அரசாங்கத்தில் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்யும் ஏழைக் குடும்பத் தலைவன்", என்றேன். அதைக் கேட்டதும் அவர் 10 புத்தகங்களை இலவசமாகவே கொடுத்தார். ஆனால் அதிலும் நான் திருப்தியடையாமல் அங்கு இருப்பில் உள்ள மற்ற புத்தகங்களையும் கண்டேன்.

அப்பொழுது அங்குள்ள சில புத்தகங்கள் என்னை 'சாம்' என்று பெயர் சொல்லி அழைப்பது போலவும், அவை என்னிடம், "எங்களை உன்னுடன் எடுத்துச் சென்று உனக்குத் தெரிந்த யாருக்காவது கொடு. எங்களுக்குள் அதிக வல்லமை உள்ளது!" என்று கூறுவது போலவும் இருந்தது. என்னால் அவ்விடத்தைவிட்டு வெளியே வர முடியவில்லை. அப்பொழுது வேறொரு சகோதரன் வந்து, "நீ யார்? ஏன் இங்கேயே நின்று கொண்டு உள்ளே பார்த்துக் கொண்டு இருக்கிறாய்?" என்று கேட்டார். நான், "மெய் தேவனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய மிகவும் வாஞ்சையாயுள்ள ஒரு ஏழை மனிதன். இந்த புத்தகங்களை வாங்க வந்தேன்," என்றேன். அவர் "அப்படியானால் பணம் கொண்டு வந்து வாங்கிக் கொள்," என்றார். எனவே எனக்கிருந்த ஒரே சொத்தான சைக்கிளை விலைக்கு விற்க முடிவு செய்தேன்.

உடனே நான் அருகிலிருந்த ஒரு சைக்கிள் பழுது பார்க்கும் ஒரு கடைக்குச் சென்று ரூ.100/–க்கு என் சைக்கிளை விற்று 200 புத்தகங்களை வாங்கினேன். எனக்கிருந்த ஒரே சைக்கிளை விற்று விட்டதால் அப்புத்தகங்களை என் தோளிலும் தலையிலுமாகச் சுமந்து, 'ஆயிரம் விளக்கு' என்ற பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டர் நடந்து என் வீட்டிற்கு வந்தேன்.

அத்தகைய கனமான சுமையை நான் சுமந்து பழக்கமில்லாததால், நான் மிகவும் களைப்பாயிருந்தேன். இரண்டு முறை வழியில் அந்த புத்தகங்கள் கட்டவிழ்ந்து என் தலையிலிருந்து கீழே சாலையில் சிதறி விழுந்தன. சிலர் என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்ததைக் கேட்டேன். நான் இறுதியாக என் வீட்டிற்கு வந்து அப்புத்தகத்தை என் முழு பெலத்தோடும் உபயோகிக்கத் தொடங்கினேன்.

பின்பு, (கர்த்தருக்குள் நித்திரையடைந்த) சகோ. M. பால்ராஜ் அவர்களுடன், 'புது வாழ்வு உமக்கு' என்ற வேத பாடத்தை **அழைப்பின் எதிரொலி** மாலை நேர கல்லூரிகளில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். அதைத் தொடர்ந்து புத்தகங்களை அச்சிட ஒரு அச்சகத்தையும், மூன்று மாலைநேர வேதாகமக் கல்லூரிகளையும் ஆரம்பித்து நடத்த தேவன் உதவினார்.

ஆம், என் அருமை நண்பரே, ஒருநாள், தேவனுடைய ராஜ்யத்திற்காக என்னுடைய பழைய சைக்கிளை இழக்க நேர்ந்தது; என்னுடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் கண்களுக்கு அது ஒரு நிந்தைக்குரிய, அறிவில்லாத செயலாகத் தென்பட்டது; ஆனால் இன்றோ தேவன் எனக்கு பல வாகனங்களையும், எனக்கு உதவி செய்ய திறமை வாய்ந்த மக்களையும் தேவன் தந்திருக்கிறார்.

ஒரு காலத்தில், சுவிசேஷ புத்தகங்களை என் தோள்களிலும் தலையிலுமாக நான் சுமக்க வேண்டி வந்தது. எனது வாலிப பருவத்தில் அச்செயல் எனக்கே வேதனைக்குரியதாகவும்

வெட்கப்படக் கூடியதுமாயிருந்தது; ஆனால் இன்றோ தேவன் எனக்கு சுவிசேஷ இலக்கிய புத்தகங்களையும், பணியாளர்களையும், பல இடங்களுக்குக் கொண்டு செல்ல பல வாகனங்களையும் தந்துள்ளார்.

அன்பு நண்பரே, உங்களுக்கும் உங்கள் எதிர்காலத்துக்கும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். இன்றே கர்த்தருக்காகப் பாடுபட முன் வாருங்கள். இயேசுகிறிஸ்துவையே நீங்கள் பின்பற்றக்கூடிய தெய்வமாகத் தெரிந்துகொள்ளுங்கள். தேவ ராஜ்யத்தை மனதில் வைத்து, தேவ பணிக்காக உங்களுக்கு மிகவும் முக்கியமாகத் தோன்றுகிறதை முதலீடு செய்யுங்கள். உங்கள் வாழ்வில் தேவன் அருளும் ஆசீர்வாதங்களுக்கு அளவே இருக்காது.

**ஒரே ஒரு வாழ்வு!**

**அதுவும் சீக்கிரமாய்க் கடந்து போகும்!!**

**கர்த்தருக்காகச் செய்வது மட்டுமே நிலைநிற்கும்!!!**

*******

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

கடின உழைப்பை ஒருவரும் கவனித்து பாராட்டவில்லையா? உங்கள் முதுகிலுள்ள தழும்புகளை மக்கள் கவனிக்காமல் இருக்க லாம். ஆனால் இயேசு அதே பாதையில்தான் சென்றார். அவரும் புறக்கணிக்கப்பட்டு, குறைகூறப்பட்டு, கேலி செய்யப்பட்டு, சோர்வுக்குள்ளாக்கப்பட்டு, தனிமையிலே விடப்பட்டார். உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் என்பதை நினைவு கூருங்கள்! அவர் உங்களை அறிவார்; உங்களுக்காக யுத்தம் செய்வார். நீங்கள் ஒன்றும் செய்யாமல் அமர்ந்திருங்கள். நமது யுத்தங்களை நடத்துகிற தேவன் நமக்கு உண்டு. அவர் தோல்வியை அறியாதவர்! தமது வல்லமையுள்ள கரத்தினால் யுத்தம் செய்யும் வல்லமையான யுத்த வீரனாக நம் தேவன் இருப்பதால், நாம் ஜெயத்தைக் காண்போம்.

## 5. வனையும் கரம்!

இறுதியாக, கர்த்தருடைய கரம் நம்மை வனையும் கரம். அவரே குயவனாக இருக்கிறார். நாம் களிமண். அவரே நம்மை வனைகிறார். சில நேரங்களில் நம்மைக் கத்தரித்து, நமது ஓரங்களைப் புடமிட்டு, சில நேரங்களில் நம்மை உண்டாக்கினவருக்குப் பிரயோஜனமாய் இருக்கும்படிக்கு, நமக்கு பிடிக்காத சில காரியங்களையும் தேவன் செய்கிறார்.

அவ்வாறு தேவன் நம்மை வனையும்போது, அது நமக்கு ஒரு நல்ல அனுபவமாக இருக்காது. அது நமக்கு வேதனை அளித்து நம்மை பாதிக்கும். இந்த நேரத்தில்தான் தேவனது அளவில்லா ஞானத்திற்கு முன்பாக நம்மை அர்ப்பணித்து அவர்மேல் நம் நம்பிக்கையை வைக்க வேண்டும். நமக்கு சிறப்பானது எது என்று தேவனுக்குத் தெரியும் என்பதை நாம் மறக்கக்கூடாது.

நம்மை வனையும்படியாகவே சில சூழ்நிலைகளையும், சில நிலைமைகளையும் தேவன் அனுமதிக்கிறார். வார்த்தைகளி னாலே நம்மைக் குத்தக்கூடிய மக்கள், அலட்சியமாகவும், எரிச்சல் உண்டாக்கும் வண்ணமாகவும் பேசக்கூடிய சில மக்கள் நம் வாழ்வில் வருவார்கள். நமக்கு பொறுமையைக் கற்றுக் கொடுக்கவே அவர்களை தேவன் அனுமதிக்கிறார். நமது சுபாவம் நல்லதாக மாறுகிறது. நமது சுபாவத்தைக் கத்தரித்து சீர் செய்ய சில காலம் மட்டும் அவர்கள் நம் வாழ்வில் வருவார்கள். தேவன் விரும்பும் வண்ணம் நாம் கத்தரிக்கப்பட்டுவிட்டால், அவர்கள் போய்விடுவார்கள். நம்மை விட்டு விலகிப் போனவர்கள் நிமித்தம் நாம் புலம்பிக் கொண்டிருப்போம். அவர்கள் என்றென்றும் நிலைத்திருக்கும் தழும்பை விட்டுச் செல்வார்கள். இந்த பாடத்தை மிகவும் கஷ்டத்துடன் கற்றிருக்கிறேன்.

சில மக்கள் சில காலத்துக்கு மட்டுமே நம் வாழ்வில் வருவார்கள். சிலர் வாழ்க்கை எனும் புத்தகத்தில் முதல் பக்கத்தில் மட்டுமே வருவார்கள். சிலர் முதல் அதிகாரத்தில் மட்டும் வருவார்கள். நம் வாழ்க்கைக் கதையில் கடைசி வரை வருவது மிக சொற்ப மக்களே. ஆகவே, நம் வாழ்விலிருந்து சில மக்கள் விலகி விட தேவன் அனுமதித்தால், தைரியமாயிருங்கள்! தேவன் எல்லாவற்றையும் அறிவார். எல்லாவற்றிற்கும் ஒரு காரணம் உண்டு.

தேவனது கரம் நம்மை நொறுக்கு வது போல் சில நேரங்களில் உணரலாம். அது உங்களை அழிப்பதற்கு அல்ல; உங்களை வனைந்து உருவாக்குவதற்கே!

**ஆகையால், ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.** 1 பேதுரு 5:6. நமது வாழ்வில் அவரது வல்லமையுள்ள கரம் எத்தகையதாய் இருக்கிறது என்று உணர்வோம்.

நமது வாழ்க்கை, விருப்பங்கள், கனவுகள் போன்ற அனைத்தையும் அவரிடம் ஒப்படைத்து விட்டு, தேவனின் பலத்த கரத்துக்குள்ளாய் அடங்கியிருப்போமானால், மேலே சொல்லப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களும் நம் வாழ்வில் கடந்து வரும்.

*******


## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது **அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப்** (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்



## உடனடி தேவை

**துணை தலைமை ஆசிரியர் & ஆசிரியர்கள்**

**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**

**An *Echo of His Call* Institution**

**விஜயநகரம், மேடவாக்கம், சென்னை – 100.**

சிறந்த கல்வித் தகுதி, அனுபவம், அர்ப்பணிப்பு மற்றும் ஊழிய நோக்குடன் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் தேவை.

*சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*

E.mail: sam@echoofhiscall.org

WhatsApp: (+91) 98412 71858



## தேவை நூலகப் புத்தகங்கள்

நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கும், நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்கும்** உள்ள தனித்தனி நூலகங்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் புத்தகங்கள் (Library Books) தேவைப்படுகின்றன. பழைய அல்லது புதிய புத்தகங்களை நல்ல நிலையில் வைத்திருப்பவர்கள் அவற்றை எங்களுக்கு வழங்க விரும்பினால் தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**

**+91-98412 71858**

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## இந்தி புத்தகங்கள் தேவை

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்காக** 1000 இந்தி கிறிஸ்தவ புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இந்தி வேதாகம புத்தகங்களை (Theological Books) சேகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்கவும்.

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
**+91-98412 71858**

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

### *2. Bank : ICICI Bank*

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**✲ வருட சந்தா ரூ. 100/– ✲ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 29th JANUARY 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**